**மாதிரி வினாத்தாள்**

வாழ்க்கை இயக்கச் செயல்கள் - பகுதி II

10th Standard

**அறிவியல்**

Reg.No. :

I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

II.நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்.

Time : 01:15:00 Hrs

Total Marks : 45

## பகுதி - அ

4 x 1 = 4

1) இலைத்துளைகள் இதற்கு உதவுகின்றன.

(a) ஒளிச்சேர்க்கையின் போது $CO_2$ வை எடுத்துக்கொள்வதற்கு (b) ஒளிச்சேர்க்கையின் போது $O_2$ வை வெளியிடுவதற்கு

(c) நீராவிப்போக்கின் போது நீராவியை வெளியிடுவதற்கு (d) இவை அனைத்தும்

2) பசுந்தாவரங்களில் காணப்படும் எந்தச் செல் நுண்ணுறுப்பை உணவு உற்பத்தி தொழிற்சாலைகள் என அழைக்கலாம்?

(a) மைட்டோகாண்டிரியா (b) பசுங்கணிகம் (c) எண்டோபிளாசவலை (d) உட்கரு

3) கஸ்க்யூட்டா,விஸ்கம் போன்ற ஒட்டுண்ணித் தாவரங்களில் காணப்படும் சிறப்பான வேர்கள் போன்ற அமைப்பு இவ்வாறு அழைக்கப்படுகிறது.

(a) வேரிகள் (b) ஹாஸ்டோரியா (c) ஹைபாக்கள் (d) ஸ்டோலன்

4) மனித உணவுக்குழல் பாதையில் அமையாத உறுப்பினை எழுதுக.

(a) தொண்டை (b) வாய் (c) வாய்க்குழி (d) கணையம்

## பகுதி - ஆ

6 x 2 = 12

5) மனிதனின் சீரண மண்டலத்தின் நீளம் என்ன?சீரண மண்டலத்தின் பாகங்களை உணவு செல்லும் அடிப்படையில் வரிசைக்கிரமமாக எழுதுக.

6) சுவாசித்தல் என்றால் என்ன?காற்றுள்ள சுவாசித்தலுக்கான வேதிச்சமன்பாட்டினை எழுதுக.

7) நீரிலிருந்து வெளியே எடுக்கப்பட்ட மீன்கள் நீண்ட நேரம் உயிருடன் இருக்கமுடியாது ஏன்?

8) அம்மோனியாடெலிக், யூரியோடெலிக் விலங்குகள் என்றால் என்ன?எடுத்துக்காட்டுகள் தருக.

9) தொட்டால் சிணுங்கித் தாவரத்தில் தொடும்போது ஏற்படும் மாற்றத்தினை விளக்குக.

10) தாவரங்களில் நடைபெறும் நீராவிப்போக்கினை விளக்கும் மாதிரி அமைப்பினை உற்றுநோக்குக. கீழ்கண்ட பொருள்கள் தாவரங்களின் எந்த அமைப்புடன் ஒப்பிடப்படுகிறது?

1)கடற்பஞ்சு 2)நீர்நிறைந்த கண்ணாடிகுழாய்.







## பகுதி - இ

6 x 5 = 30

11) காற்றுள்ள சுவாசம்,காற்றில்லா சுவாசம் வேறுபடுத்துக.இரண்டிற்கும் பொதுவான நிகழ்வு எது?

12) பின்வரும் மனிதனின் சுவாசத்தை விளக்கும் மாதிரியை உற்றுநோக்குக.பின்வரும் சுவாச மண்டலத்திலுள்ள உறுப்புகளை குறிப்பிட்ட மாதிரியில் பயன்படுத்தப்பட்ட பொருள்களை கண்டறிக.



1)நுரையீரல்

2)உதரவிதானம்

3)மூச்சுக்குழல்

4)நாசித்துவாரங்கள்(மூக்கு)

QUESTION BANK 365 https://www.qb365.in

13) பின்வரும் படத்தை உற்றுநோக்குக.




நீர் ஊற்றி வளர்க்கப்பட்ட A மற்றும் Bஆகிய இரு தாவரங்களைச் சூரிய ஒளிபடும்படி வைக்கவேண்டும். KOH(பொட்டாசியம் ஹைட்ராக்ஸைட்)அடங்கிய சீசாவினுள் உள்ள B தாவரஇலையின் ஒருபகுதியை ஸ்டார்ச்/அயோடின் சோதனைக்கு உட்படுத்தும் போது நீலநிறமாக மாறுவதில்லை. இது இலையில் ஸ்டார்ச் இல்லாததைக் குறிக்கிறது. ஆனால் மேல்கூறப்பட்ட சோதனையில் சீசாவிற்கு வெளியே உள்ள இலையின் பகுதி நீலநிறமாக மாறுகிறது. பின்வரும் எந்த மூலப்பொருள்கள் இல்லாததால் சீசாவினுள் இலையின் பகுதியில் ஒளிச்சேர்க்கை நடைபெறவில்லை.-------------

i)அ) சூரியஒளி ஆ) பச்சையம் இ) $CO_2$ ஈ) நீர்

ii)சீசாவிற்கு வெளியே உள்ள இலையின் பகுதிக்கு கிடைக்கும் காரணிகளை பட்டியலிடுக.

14) i)படத்தை பார்த்து சரியான உணஊட்டமுறையை தேர்ந்தெடுக்க.

| அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|
| சாறுண்ணி | பிற ஊட்டமுறை | தற்சார்பு ஊட்டமுறை | பிற ஊட்டமுறை |
| பிற ஊட்டமுறை | தற்சார்பு ஊட்டமுறை | சாறுண்ணி | சாறுண்ணி |
| தற்சார்பு ஊட்டமுறை | சாறுண்ணி | தற்சார்பு ஊட்டமுறை | பிற ஊட்டமுறை |
| தற்சார்பு ஊட்டமுறை | பிற ஊட்டமுறை | பிற ஊட்டமுறை | சாறுண்ணி |

ii)ஏன் தற்சார்பு ஊட்டமுறை என அழைக்கப்படுகிறது?




15) பின்வரும் தொடர்நிகழ்வுப் படத்தினை உற்றுநோக்கவும்.




i)X-என்பது எதைக் குறிக்கிறது? ii)அது எந்த வகையில் இரத்தத்திலிருந்து வேறுபடுகிறது?

16) பின்வரும் சோதனை அமைப்பை உற்றுநோக்குக.




அ)இப்படம் உணர்த்தும் நிகழ்ச்சியின் பெயரையும்,வெளியிடும் வாயுவின் பெயரையும் எழுதுக.

அ)சுவாசித்தலில்,$CO_2$ ஆ)ஒளிச்சேர்க்கை,$O_2$ இ)நீராவிப்போக்கு,$H_2O$ ஈ)கழிவுநீக்கம்,$N_2$

ஆ)ஒளிச்சேர்க்கை என்றால் என்ன? இந்த உயிர் வேதிவினைக்கான சமன்பாட்டினை எழுதுக.

******************************************

QB365 QUESTION BANK 365 https://www.qb365.in